**செய்தி வெளியீடு எண்: 434** **நாள்: 05.07.2018**

**செய்தி வெளியீடு**

இமயமலையில் அமைந்துள்ள கைலாஷ் மானசரோவருக்கு ஆண்டுதோறும் ஜுன் முதல் செப்டம்பர் வரையிலான மாதங்களில், நாடு முழுவதிலிருந்தும் பக்தர்கள் யாத்திரை செல்கின்றனர். சென்ற மாதம், தமிழ்நாட்டிலிருந்து சென்ற யாத்திரிகர்கள் மோசமான பருவநிலை காரணமாக நேபாளத்தில் சிக்கி தவிப்பதாக தகவல் அறிந்து, அவர்களை பாதுகாப்புடன் மீட்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் உத்தரவிட்டார்கள்.

அதன்படி, தமிழ்நாடு அரசு அதிகாரிகள், இந்திய வெளியுறவுத் துறை அமைச்சகம் மற்றும் நேபாளத்தில் அமைந்துள்ள இந்திய தூதரகம் ஆகியவற்றுடன் தொடர்பு கொண்டு, நேபாளத்தில் சிமிகோட் பகுதியில் சிக்கி தவித்த 18 யாத்திரிகர்களை சிமிகோட் பகுதியிலிருந்து நேபாள்கஞ்ச் என்ற இடத்திற்கு விமானம் மூலம் அழைத்து வரப்பட்டு, புதுதில்லி தமிழ்நாடு இல்லத்தின் அதிகாரிகள் நேபாள்கஞ்ச் சென்று, இந்திய தூதரகம் மற்றும் நேபாள அரசின் ஒத்துழைப்போடு, யாத்திரிகர்கள் பாதுகாப்பாக தமிழ்நாட்டிற்கு அழைத்து வரப்பட்டனர்.

தமிழ்நாடு அரசின் உதவியால் பாதுகாப்பாக மீட்கப்பட்ட யாத்திரிகர்கள் திரு.எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம், திரு.எல். ஹரிஹரன், திரு.சி.என்.ரவி, திரு.டி.வி. சாந்தமூர்த்தி, திருமதி கே.எஸ். விஜயலட்சுமி, திருமதி பி. அன்னபூர்ணா, திரு.ஜி. ஆனந்தம், திரு.வி. கோபாலகிருஷ்ணன், திருமதி பி. பிரேமலதா, திரு.டி.எம். சுப்பிரமணியம், திருமதி ஏ.எஸ். லட்சுமி, திரு.ஆர். சுப்பிரமணி, திருமதி எஸ். மீனாட்சி, திரு.என். சக்திவேல் ஆகியோர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்களை இன்று (5.7.2018) தலைமைச் செயலகத்தில் சந்தித்து, தங்களை பாதுகாப்பாக மீட்டு, சொந்த ஊர் திரும்பிட தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்தமைக்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டார்கள்.

இந்த நிகழ்வின்போது, மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் திரு.ஆர்.பி. உதயகுமார், பேரிடர் மேலாண்மைத் துறை ஆணையர் திரு. இராஜேந்திர ரத்னூ, இ.ஆ.ப., சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.வி. அன்புசெல்வன், இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர்.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9
நாள்: 5.7.2018